வேளாண்துறையில் திராவிட மாடல் அரசு தொடர்ந்து சாதனை!

உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் அன்புமணி அறிக்கை விடுவதா?

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆதாரங்களுடன் அறிவிப்பு!

சென்னை, ஜன.15-

உழவர்கள் நெஞ்சத்தில் மகிழ்ச்சி பொங்குகிறதா? என்ற கேள்வியுடன் ஒரு விளம்பரம் தேடும் உண்மைக்கு புறம்பான அறிக்கையை வெளியிட்டுள்ள சொந்த கட்சியிலிருந்து அடித்து விரட்டப்பட்ட அன்புமணி அவர்கள் பொய்யைத் தவிர வேறு ஒன்றும் அறியாதவர். பழைய அறிக்கைகளை தொகுத்து ஒன்றும் தெரியாமல், விவரம் அறியாமல் அன்றாடம் அறிக்கை விடுவதும், நகர வாழ்க்கையில் வாழ்ந்துக்கொண்டு விவசாயத்தின் அருமை, பெருமைகள் தெரியாமல், வயல்வெளியில் நடக்காமல், வயலில் அண்டைவெட்டுவது என்னவென்று தெரியாமல் அவர் வீட்டு ஜன்னலில் இருந்து கடற்கரையில் டால்பின்கள் விளையாட்டை கண்டு மகிழ்ந்து அறிக்கைவிடும் "டால்பின் அன்புமணி" அவர்களுக்கு விவசாயிகளின் துயர் என்னவென்று ஒன்றும் தெரியாதவர்.

எடப்பாடியின் ஊதுகுழல்!

தைத்திங்கள் தமிழர்திருநாளாம் பொங்கல் அன்று இந்த உலகத்தை காத்தருளும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக விவசாய பெருங்குடி மக்கள், நேற்றைய தினம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து விவசாய சங்கங்களின் தலைவர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு திராவிட மாடல் நல்லாட்சி நடத்தும் திராவிட மாடல் சூரியனான முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியினால் வேளாண்மைக்கென பல புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வரும் அவர்களுக்கு நன்றி பெருக்கோடு தங்களுடைய நன்றியினையும், பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்து மகிழ்ந்தனர். அதேபோல வரும் சட்டமன்ற தேர்தலிலும் உதய சூரியனுக்கு நிச்சயம் நன்றி பாராட்டுவர் வேளாண் பெருங்குடி மக்கள் என்பது உண்மை.

இந்த சிறப்பான நிகழ்வை பொறுத்துக்கொள்ள இயலாமல் ஒவ்வொரு முறையும் விவசாய சங்கத் தலைவர்கள் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை பாராட்டும் போதெல்லாம் பொறுத்துக்கொள்ள முடியாமல் ஒவ்வொரு முறையும் தான் சேர்ந்திருக்கும் புதிய கூட்டணியின் எஜமானர்களை திருப்திபடுத்தும் நோக்குடன் வெற்று அறிக்கை அன்புமணி தனது கூட்டணி விசுவாசத்தை காட்டிட, தமிழ்நாடு மக்களை குழப்பும் விதமாக, எடப்பாடியின் ஊதுகுழலாக இருந்து கொண்டு இவ்வரசை குறை சொல்வதையே நோக்கமாக கொண்டு குழப்பமான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

திமுக-வின் ஐந்தாண்டு திராவிட மாடல் ஆட்சியில் விளைநிலங்கள் செழித்து, அதற்குரிய பலன்களும் அதிகமாகியிருக்கிறது என்பதுதான் உண்மை. 2023-24 மற்றும் 2024-25ஆம் ஆண்டுகளில் அதிக வடகிழக்கு பருவமழை, தென்மேற்கு பருவமழை பற்றாக்குறை, வறட்சி, பருவம் தவறி பெய்த கனமழை, மிக்சாம் புயல், ஆலங்கட்டி மழை, சூரைக்காற்று போன்ற பல்வேறு இயற்கை இடர்பாடுகளால் 20 இலட்சம் ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் பாதிப்படைந்த போதிலும் 2023-24ஆம் ஆண்டில், 109.51 இலட்சம் மெட்ரிக் டன் மற்றும் 2024-25ஆம் ஆண்டில், 110.04 மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி அடையப்பட்டது. அதேபோல சாகுபடி பரப்பும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், டால்பின் அன்புமணி தமிழ்நாட்டின் வேளாண் வளர்ச்சி குறித்து, சிறிதும் புரிதல் இல்லாமல் தவறான தகவல்களை சமீபகாலங்களில் வெளியிட்டு வருகிறார்.

ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்டச்செயலாக்க அமைச்சகத்தின் தரவுகளின் அடிப்படையில், வேளாண்மையில் 2012-13 முதல் 2020-21 வரை சராசரியாக 1.36 சதவீதமாக இருந்த மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSVA). 2021-22 முதல் 2024-25 வரையிலான காலத்தில் 3.03 சதவீதமாக உயர்ந்துள்ளது. அடிப்படை ஆண்டான (Base Year) 2011-12 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில்2024-25 ஆம் ஆண்டில் வேளாண்மையில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி 9.97 சதவீதம் உயர்ந்துள்ளது. அதாவது ரூபாய் மதிப்பில் 2011-12ஆம் ஆண்டில், ரூ.53,75,639 இலட்சம் ஆக இருந்த மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி. 2024-25ஆம் ஆண்டில் ரூ.59,11,708 இலட்சம் ஆக உயர்ந்துள்ளது.

2012-13 முதல் 2020-21 வரை சராசரியாக 1.13 சதவீதமாக இருந்த நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி (NSVA). 2021-22 முதல் 2024-25 வரையிலான காலத்தில் 2.74 சதவீதமாக உயர்ந்துள்ளது. அடிப்படை ஆண்டான (Base Year) 2011-12 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024-25 ஆம் ஆண்டில் வேளாண்மையில் நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி 3.09 சதவீதம் உயர்ந்துள்ளது. அதாவது ரூபாய் மதிப்பில் 2011-12ஆம் ஆண்டில், ரூ.50,31,026 இலட்சம் ஆக இருந்த நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி. 2024-25ஆம் ஆண்டில் ரூ.51,86,276 இலட்சம் ஆக உயர்ந்துள்ளது. இந்த விவரங்கள் யாவும் இவர் கூட்டணி சேர்ந்திருக்கும் ஒன்றிய அரசு வெளியிட்ட புள்ளி விவரங்களே என்பது உண்மை.

எடப்பாடியின் மோசமான ஆட்சி!

இந்த புள்ளி விவரங்களை பார்க்கும் போது, இவர் தற்போது கூட்டு சேர்ந்திருக்கும் புதிய கூட்டணியின் எடப்பாடியின் கடந்த கால ஆட்சிதான் மோசமான ஆட்சியாகும். அந்த 10 ஆண்டு இருண்ட கால ஆட்சியை நடத்திய எடப்பாடியின் ஆட்சியில்தான் வேளாண் உற்பத்தி குறைந்து காணப்பட்டது என்பது தெளிவாகும்.

திமுக ஆட்சியில் ஐந்தாண்டு காலத்தில் ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.81 மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்ற பொய்யான விவரத்தை தெரிவித்துள்ளார் வெற்றறிக்கை அன்புமணி.

நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை

நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய அரசின் வேளாண் விலை மற்றும் செலவு ஆணையத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் மாநில அரசு நெல் சாகுபடிக்கு ஆகும் செலவினத்தை கணக்கிட்டு குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்தி வழங்க பல்வேறு கோரிக்கைகள் வைத்தும் இவர் அங்கம் வகிக்கும் பாஜக அரசிடம் கேட்டு அதிக ஆதரவுவிலையை பெற்றுத் தர முடியாவிட்டால் இவர் இந்த கூட்டணியில் இருந்தே வெளியேற தயாராக இருக்கிறரா என்பதை இவர் தெளிவுபடுத்த வேண்டும். அவ்வாறு இல்லாமல், ஒன்றிய அரசின் எந்த வித சரியான நிதி பங்களிப்பு இம்மாநிலத்திற்கு வழங்காத நிலையிலும் 2020-21 ஆம் ஆண்டினை ஒப்பிடுகையில் நெல் சாதாரண ரகத்திற்கு 1,868 ரூபாயாக இருந்த ஆதரவு விலையை ஒன்றிய அரசு 2025-26ஆம் ஆண்டில் 2,369 ரூபாயாக நிர்ணயித்துள்ளது. இது வெறும் 27 சதவீத உயர்வு மட்டுமே ஆகும். மேலும், நெல் சன்ன ரகத்திற்கு 1,888 ரூபாயாக இருந்த ஆதரவு விலையை ஒன்றிய அரசு 2025-2026 ஆம் ஆண்டில் 2,389 ரூபாயாக ஆக நிர்ணயித்துள்ளது. இதுவும் வெறும் 27 சதவீத உயர்வு மட்டுமே. இதை எதிர்த்து கேட்க தெம்பும், திராணியும் இல்லாத இவர், இவ்வரசை குறை சொல்வது எந்த விதத்தில் நியாயம். ஆனால் விவசாயிகளுக்கு வாழ்வாதாரத்தை பெருக்கிட வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக தமிழ்நாடு அரசு கடந்த காலத்தில் சன்ன ரகத்திற்கு 70 ரூபாயாக இருந்த ஊக்கத் தொகையை 156 ரூபாயாக ஆக உயர்த்தி தற்போது வழங்கியுள்ளது. இது 123 சதவீத உயர்வாகும். மேலும், இவ்வரசு, சாதாரண ரக நெல்லுக்கு 50 ரூபாயாக இருந்த ஊக்கத்தொகையை 131 ரூபாயாக உயர்த்தி வழங்கியுள்ளது. இது 162 சதவீத உயர்வாகும். இந்த விவரத்தை தமிழ்நாட்டு விவசாயிகளிடமிருந்து இவர் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்.

இயற்கைப் பேரிடர் நிவாரணம்.

கடந்த 2011 முதல் 2021 வரை நடந்த அதிமுக ஆட்சியில் தமிழ்நாட்டு விவசாயிகள் இடர்பாடுடனே தங்களது வாழ்க்கையினை சிரமத்துடன் நடத்தி வந்தனர். அதிமுக ஆட்சியில் போராட்ட வாழ்க்கையுடன் அதிகளவில் விவசாயிகளின் தற்கொலைகளும் நிகழ்ந்தது. இதுபற்றி ஒன்றும் அறியாத வெற்று அறிக்கை அன்புமணி அவர்கள் கடந்த 4 ஆண்டுகளில் (2021-22 முதல் 2024-25 வரை) இயற்கை பேரிடர்களால் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களில் 13.29 இலட்சம் பரப்பில் ஏற்பட்ட பயிர் சேதத்திற்கு ரூ.1,631.53 கோடி நிவாரணத் தொகையாக 20.84 இலட்சம் விவசாயி களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2024 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையினால் பாதிப்பு, 2025ல் ஜனவரி மாதத்தில் பருவம் தவறி பெய்த கனமழையால் பாதிப்பு என 2.29 இலட்சம் எக்டரில் பாதிக்கப்பட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு ரூ.289.63 கோடி நிவாரணம் வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டு அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டுவிட்டது.

2025-26ஆம் ஆண்டில், வடகிழக்கு பருவமழை 2025 & டித்வா புயலால் 56,226 எக்டரில் பாதிக்கப்பட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு ரூ.111.96 கோடி நிவாரணம் வழங்குவதற்கான ஆணை இன்றே பிறப்பிக்கப்பட்டு, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரையில் ஏற்பட்ட அனைத்து இயற்கை இடர்பாடுகளுக்கும், திராவிட மாடல் நாயகன் பாதிப்பு ஏற்பட்ட உடனே நேரடியாக களத்திற்கு சென்று பாதிக்கப்பட்டவர்களின் துயரத்தினை அறிந்து, அவ்வப்போது நடவடிக்கை எடுக்கும் இவ்வரசினை குற்றம் சுமத்துவது சரியல்ல. அதேபோல், அவரின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு கற்பனையும், ஃபேண்டசியும் கலந்து டால்பின் அன்புமணிக்கு என்னவென்று தெரியாமல் தவறான அறிக்கையினை எழுதிகொடுக்கும் எஜமானர்களை திருப்திபடுத்துவதுதான் இவருடைய வாடிக்கையாக உள்ளது. இனிவருங்காலங்களில் உண்மையினை ஆராய்ந்து அறிக்கை விடுவது இவருக்கும் நல்லது. இவர் வகிக்கும் கூட்டணிக்கும் நல்லது.

இவ்வாறு எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பல்வேறு நலத்திட்டங்களால் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான

திராவிட மாடல் அரசை ஒட்டுமொத்த தமிழ் மக்களும் பாராட்டுகிறார்கள்!

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேச்சு!

சென்னை, ஜன.15-

திமுக சட்டத்துறை சார்பில் வடசென்னையில் திராவிட பொங்கல் விழா தண்டையார்பேட்டை அப்போலோ மருத்துவமனை அருகே நடைபெற்றது.

சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்எல்ஏ முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாநில சட்டத்துறை துணை செயலாளர் மருது கணேஷ் செய்திருந்தார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்றார்.

நிகழ்ச்சியின் தொடக்கமாக பெண் வழக்கறிஞர்கள் வண்ணக்கோலமிட்டு சமத்துவ பொங்கல் வைத்து கொண்டாடினர்.

பின்னர் கழக வழக்கறிஞர்களை கௌரவிக்கும் விதமாக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ ஆகியோர் புத்தாடை, கரும்பு, காலண்டர் ஆகியவை வழங்கினர்.

இதில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேசியதாவது :-

தி.மு. கழகத்தின் வரலாற்றில் சட்டத்துறைக்கு என்றும் ஒரு நிரந்தரமான இடம் உண்டு. தேர்தல் காலங்களில் போது மட்டுமல்லாமல் கட்சி கொடி மற்றும் சின்னத்திற்கு பாதகம் வந்த போதும், அறிவாலயத்திற்கு இடையூறு வந்த போதும், ஏன் டாக்டர் கலைஞர் அவர்கள் மறைந்த போது அவருக்கு அடக்கம் செய்திட இடம் தர மறுத்த போது நீதிமன்றத்தில் போராடி இடத்தை பெற்றுத் தந்ததில் சட்டத்துறைக்கும் முக்கிய பங்கு உண்டு.

ஒன்றிய அரசு ஓட கைகோர்த்துக்கொண்டு தேர்தல் ஆணையம் SIR என்ற ஒன்றை பீகார் மாநிலத்தில் கொண்டு வந்து அதிகார துஷ்பிரயோகம் செய்து லட்சக்கணக்கான தகுதியான வாக்காளர்களை நீக்கினார்கள்.

அதே போல் தமிழ்நாட்டிலும் SIR மூலம் தகிடுதத்தம் செய்ய முயற்சி செய்தார்கள். ஆனால் இந்தியா விலேயே அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் BLA2 மட்டுமல்ல BDA, BLC என அனைத்து நிலைகளிலும் முகவர்களை நியமித்த ஒரே கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் என்ற காரணத்தால் SIR பணியின் போது திமுகழகத்தின் நிர்வாகிகள், சட்டத்துறை நிர்வாகிகள் ஒவ்வொருவரும் கண்ணும் கருத்துமாய் செயல்பட்டு தமிழ்நாட்டில் தகுதியுள்ள ஒரு வாக்காளர் கூட நீக்க கூடாது என்பதில் உறுதியாய் இருந்து பணியாற்றிய காரணத்தினால் SIR பணியில் நாம் வெற்றி பெற்றுள்ளோம். அதற்காக சட்டத்துறை நிர்வாகிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அனைவருக்கும் தலைமை கழகத்தின் சார்பில் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இன்னும் நமது பணி முடியவில்லை,

இன்னும் தேர்தல் வர 60 நாட்களில் தான் உள்ளது . இந்த 60 நாட்களும் நாம் விழிப்புடன் இருந்து பணியாற்ற வேண்டும். இந்த பணியின் தொடர்ச்சி தான் நமது வெற்றிக்கு வழிவகுக்கும். நாம் வருகின்ற 60 நாட்கள் ஆற்றும்பணி 60 ஆண்டுகளுக்கு வித்திட்டாதாக அமையும்.

திமுக தான் பல கட்சிகளுக்கு தாய் கழகமாக உள்ளது.

இந்தியாவில் பல கட்சிகள் திமுகவின் சட்டதிட்ட விதிகளை அடிப்படையாகக் கொண்டு அதனைப் பின்பற்றி இயக்கம் நடத்தி வெற்றி பெற்ற வரலாறுகள் எல்லாம் உண்டு.

இன்றைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அதிரடி நடவடிக்கைகளை பார்த்து எதிர்க்கட்சிகள் கதிகலங்கி போய் உள்ளது.

திராவிட மாநில அரசு புத்தாண்டு மற்றும் பொங்கல் பரிசாக அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியம் வாங்கியது. ரேஷன் கடைகளில் 3000 ரூபாய் கொடுத்து அனைவர் இல்லங்களிலும் மகிழ்ச்சி பொங்க செய்துள்ளது. இதனால் தமிழ்நாடு முழுவதும் உள்ள பொதுமக்கள் குறிப்பாக பெண்கள் திமுக அரசை குறிப்பாக தமிழ்நாடு முதலமைச்சரை பெரிதும் பாராட்டு வருகிறார்கள்.

குறிப்பாக பெண்களுக்கு என்றுமே நன்றி உணர்ச்சி அதிகம், நன்றி மறக்க மாட்டார்கள், அதன் அடிப்படையாக திராவிட மாடல் அரசு பெண்கள் நடனுக்காக, பெண்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. தமிழகத்தில் பெண்கள் உள்பட அனைவரும் பயன்பெறும் வகையில் சிறப்பாக ஆட்சியை நடத்தி வருகிறது. பொங்கல் பண்டிகை முடிவதற்குள் மீண்டும் ஒரு சிறப்பான செய்தியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட உள்ளார்.

அது மட்டுமல்ல அடுத்து 2026 சட்டமன்ற தேர்தலிலும் திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டணி வெற்றி பெற்று திமுக அரசு ஏழாவது முறையாகவும், தமிழ்நாடு முதலமைச்சராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இரண்டாவது முறையாகவும் பொறுப்பேற்பார்.

அதன் பயனாக திராவிட மாடல் அரசின் சாதனைகள் அடுத்த ஐந்தாண்டுகள் நிச்சயம் தொடரும். தமிழ்நாடு அரசு வளர்ச்சி பாதையில் செல்லும், பெண்கள் முன்னேற்றத்திற்கான திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்

இங்குள்ள வழக்கறிஞர்கள் கழகத்தின் வெற்றிக்காக தீவிரமாக பாடுபடுங்கள். உங்களது உழைப்பும் நிச்சயம் போற்றப்படும் மதிக்கப்படும்

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் சட்டத்துறை இணை செயலாளர்கள் சூர்யா வெற்றி கொண்டான், கே.பச்சையப்பன், கே.சந்துரு. பெ.ரகு, ஜி.சந்திரபோஸ், மீஞ்சூர் கே.சுரேஷ், கே.ஜே.சரவணன், ஆர்.கே.நகர் பகுதி செயலாளர்கள் லட்சுமணன். ஜெபதாஸ் பாண்டியன், மாவட்ட அமைப்பாளர் த.சிவராம் மற்றும் திமுக நிர்வாகிகள் ஆகியோர் பங்கேற்றனர். இறுதியில் வழக்கறிஞர் பொம்முராஜ். நன்றி உரை கூறினார்.

இந்நிகழ்ச்சியில் தி.மு.க. சட்டத்துறையை சேர்ந்த 200 க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

"அன்னம் தரும் அமுதகரம்" 329 வது நாள்!

துறைமுகம் தொகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,ஜன.15-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 329ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (14.01.2026), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 54ஆ, உட்வார்ப் 3வது சந்து, வால்டாக்ஸ் ரோடு, சென்னை. 2) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 60, நான்காவது கடற்கரை சாலை, கோபால் தெரு, சந்திப்பு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, P.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R. அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

பொங்கலில் மகிழ்ச்சி; புத்தாண்டில் மலர்ச்சி!

தங்குலெனும் காரிருள்
கடுகளவும் இல்லாமல்
இங்கொழிக்கும் கதிரவனை
எழுச்சிதரும் ஒளிப்பிழம்பைப்
பொங்குகடல் சூழ்ந்திருக்கும
பொலிவான தமிழ்நாட்டின்
வங்கத்துக் கடலோரம்
வளர்கின்ற வண்சுடரைப்
பொங்கலிட்டுக் கொண்டாடிப்
போற்றிடும் திருநாள்தான்
சங்ககாலம் முன்னிருந்தே
தமிழர்கள் வாழ்விலே
தங்கம்போல் உயர்வாகும்;
தைத்திங்கள் முதல்நாளில்
எங்கெங்கும் மக்களுள்ளம்
இல்லமெல்லாம் மகிழ்ச்சிவெள்ளம்
தங்குதடை இல்லாமல்
ததும்பிமிக வழிந்திடுமே!

ஞாலமெல்லாம் ஒளிதரும்
ஞாயிறெனும் சூரியன்தான்
காலத்தால் அழியாத
கண்கண்ட கடவுளாம்!
நீலவான் ஊர்வதுபோல்
நிலவுலகம் கண்டாலும்
மூலவன் அவனேதான்,
முதல்வனும் அவனேதான்!

கோலமெலாம் அவனிங்கே
கொடுக்கின்ற ஒளியால்தான்
சாலவும் உயிரினங்கள்
தழைத்திடும்
மண்ணுலகில்!
பாலொளியாம்
பகலொளியைப்
பாய்ச்சுகின்ற சூரியன்தான்
மேலாவான் என்றவன்தன்
மேன்மையைப்போற்றிடும்
பாலமுதாம் பொங்கலினைப்
படைத்திங்கே வாழ்த்துவோம்!

செங்கரும்பும் மஞ்சளும்
திகழ்ந்திடப் புதுப்பானை
பொங்கிடப் பாலூற்றிப்
புத்தரிசி இட்டு அடுப்பில்
வெங்கனல் ஏற்றிட
வெந்தெழும் பொங்கல்தான்
திங்கள்போல் வெள்ளைமனம்
செந்தமிழர்க்கு
எனக்காட்டச் செங்கதிர்ச் சூரியன்
தீந்தமிழர் உள்ளங்கள்
தங்குகின்றான்,பேரொளியைத்
தட்டாமல் தருகின்றான்
இங்கவன் வாழ்கவென
இன்குரல் எழுப்பியே
பொங்கலோ பொங்கலெனப்
புத்துணர்ச்சி கொள்ளவே
எங்கணும் மகிழ்ச்சியே,
இல்லமெலாம் மலர்ச்சியே!

தமிழருக்கு எதிராகத்
தலைதூக்கும் தண்ணீரின்
குமிழிகளே, மோதுவது
குன்றான இமயத்தில்!
உமியாகப் பறப்பீர்கள்
ஊதினால் எப்போதும்!

இமிழ்கடல் வேலியாய்
இலகுகின்ற தமிழ்நாடு
அமிழ்தளிக்கும் நட்பானால்,
அகற்றிவிடும் பகையானால்!
திமிரெடுத்துப் போடுகின்ற திட்டங்கள்
தேர்தலில்
அமிழ்ந்துவிடும்என்பதுதான்
அன்றகதிர் போல்உண்மை!
உமிழ்நீரும் வற்றிவிட
ஓடுவீர் களம்விட்டு!
கமழ்கின்ற பொங்கலன்று
கட்டுறுதி கொள்ளுவோம்,
சமயத்தை முன்னெடுக்கும்
சங்கிகளை வெல்லுவோம்!
தமிழாலே பொங்கியே
சழக்கரைப் பொசுக்குவோம்!

பேராசிரியர்
மா.செல்வராசன்

குமைந்திங்கே மாரடிக்கும் கூலிகளின் கூவல்கள்,
இமைதிறந்து மூடுமுன்னே
இற்றொழியும் ஈசல்கள்!
நமைவெல்ல யாருமில்லை
நம்பிக்கை மெய்யாகச்
சுமையென்று கருதாமல்
சுழலாகச் செயற்பட்டால்
இமயமும் கைகூடும்,
எல்லாமே வெற்றியாகும்!

சமரெனினும் அஞ்சாத
தன்மானத் தமிழ்நாட்டின்
நிமிர்ந்தெழும் மக்களே,
நினைத்திங்கே பொங்குங்கள்;
தமிழ்மொழி இனம்நாடு
தலைநிமிரப் பொங்குங்கள்;
தமிழரை உணராத
தருக்கர்மேல் பொங்குங்கள்,
கமழ்ந்தது பொங்கலெனக்
காலத்தில் பொங்குங்கள்
அமைந்தது வெற்றியென
ஆதவன் போற்றுங்கள்!